செ.வெ.எண். 34/ஜூலை தேதி : 22.07.2016

# பத்திரிக்கைச் செய்தி

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட அல்லியூர் கிராமத்தில் நடைபெற்ற அம்மா திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**





தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அல்லியூர் கிராமத்தில் அம்மா திட்ட முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.07.2016) நடைபெற்றது.

இம்முகாமில் இணையதளம் வாயிலாக பட்டா மாறுதல் உத்தரவு 13 நபர்களுக்கும், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம், முகவரி மாற்றம் செய்த குடும்ப அட்டைகளை 75 நபர்களுக்கு வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் வெள்ளிக்கிழமை தோறும் அம்மா திட்ட முகாம் நடத்த வேண்டுமென்ற ஆணைக்கிணங்க கிராமங்கள் தோறும் அரசு துறை அதிகாரிகள் ஒருங்கே இணைந்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வண்ணம் நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் உழவர் பாதுகாப்பு அட்டை பெற்று கொள்ள வேண்டும். அதன் மூலம் அரசு வழங்குகிற கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித் தொகை, முதியோர் உதவித்தொகை போன்றவற்றை பெறுவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அலுவலகங்களிலும் தமிழ்நாடு அரசின் மின்னாளுமை திட்ட சேவை மையம் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் சாதி சான்று, இருப்பிடச்சான்று, வருமானச்சான்று, முதல் பட்டதாரி சான்று, சிட்ட நகல்கள், வில்லங்கச் சான்று போன்ற சான்றிதழ்களை பெற கூட்டுறவு சங்கங்களில் இயங்கும் மின்னாளுமை திட்ட சேவையை பயன்படுத்தி கொள்ளலாம். மேலும் பொதுமக்கள் தங்களது குறைகளை தெரிவிக்க மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை 1077 என்ற எண்ணிற்கு புகார் தெரிவிக்கலாம். தாங்கள் தெரிவிக்கும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனி நபர் கழிப்பறை அமைப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும். அதற்காக அரசு ரூ. 12 ஆயிரம் மானியமாக வழங்கி வருகிறது. எனவே சுகாதாரத்தை முழுமையாக பேணிக்காக அனைவரும் கழிப்பறையை அமைத்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திரு. அம்பிகாபதி, அல்லியூர் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி. ராஜாத்தி கந்தசாமி, வட்டாட்சியர் திரு. சரவணன், தனி வட்டாட்சியர் திரு. அதியமான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.